2017 ஜூன் 15]

வருவாய்த் துறை நிலையாணை எண் 21(6)—ன் கீழே வழங்கப்படுகின்ற பட்டாக்களையும் மாவட்ட ஆட்சியர்களோ, கோட்டாட்சியர்களோ வரன்முறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, தகுதியான நிலங்களாக இருந்தால் தடையாணை இருந்தாலும்கூட அதை 21(6)—ன் கீழே வரன்முறைபடுத்தலாம் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

20—

பேருந்து வசதி

***4649—திரு. அ. சண்முகம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிணத்துக்கடவு தொகுதி, காந்திபுரம் முதல் ரங்கேகவுண்டன்புதூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தற்போது ரங்கேகவுண்டன்புதூருக்கு காந்திபுரத்திலிருந்து ஒரு நகரப் பேருந்து மூலமாக தினசரி 18 நடைகளும், கிணத்துக்கடவிலிருந்து ரங்கேகவுண்டன்புதூருக்கு ஒரு நகரப் பேருந்து மூலமாக தினசரி 11 நடைகளும் ஆக மொத்தம் இரண்டு பேருந்துகள் மூலமாக தினசரி 29 நடைகள் தற்போதைய பயணிகளின் அடர்விற்கேற்ப இயக்கப்பட்டு வருகின்றன. இதுவே அப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில்

உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். அம்மா அவர்களின் நல்லாசியோடு ஆட்சி நடத்திவரும் தமிழக முதல்வர் அவர்களையும் வணங்குகிறேன். எங்களுடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. எனினும், தற்போது இயங்கி வரும் பேருந்து போதுமானதாக இல்லை. பள்ளிக் குழந்தைகள் நலன் கருதி, மக்கள் நலன் கருதி, ரங்கேகவுண்டன்புதூர் முதல் காந்திபுரம் வரையுள்ள வழித்தடத்தை கூடுதலாக உருவாக்கிக் கொடுத்தால், அப்பகுதி மக்களுக்கு பேருதவியாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை மறுபரிசீலனை செய்து, கூடுதலாக ஒரு பேருந்து இயக்க ஆவன செய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற வழித்தடத்தில் இயங்கக்கூடிய பேருந்துகளில் பயணிகளுடைய அடர்வுகளை ஆய்வு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சண்முகம் அவர்கள்.

திரு. அ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி.